Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 338 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.9**
Defence
Court

| | |
|---|---|
| Name | திரு. சக்கரவர்த்தி |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 23rd day of October 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 23rd day of October 2025.**

**4 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். 2 வது எதிரி PT Warrant அனுப்பப்பட்டும் இன்று ஆஜர் செய்யப்படவில்லை. எனவே வழக்கறிஞர் தரப்பில் குறிப்பாணை மட்டும் பெறப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல்விசாரணை**:

நான் தற்போது விருத்தாசலம் வட்டம் கார் குடல் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு விருத்தாசலம் வட்டம் பெரியாகுறிச்சி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அப்போது 20.04.2018 அன்று நெய்வேலி தெர்மல் காவல் ஆய்வாளர் அவர்கள் காலை 6.00 மணிக்கு போன் செய்து தாண்டவன்குப்பம் பகுதியை சேர்ந்த வெட்டு சசி என்கிற சசிக்குமார் என்பவரின் கொலை வழக்கு சம்பந்தமாக 5 எதிரிகள் தாமாக முன் வந்து ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்து இருப்பதாகவும் அதில் சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டார். என்னை நெய்வேலி தெர்மல் காவல் நிலையத்திற்கு வரமாறு கூறினார். நான் 6.45 முதல் 7.00 மணிக்குள் காவல் நிலையம் சென்றேன். நான் சென்ற போது எதிரிகள் 5 பேரும் கங்கைகொண்டன் கிராம நிர்வாக அலுவலர் மணிகன்டனும் அங்கு இருந்தார். எங்கள் முன்னிலையில் எதிரி கட்டை 1 வது எதிரி ராஜேந்திரன் மற்றும் 2 வது எதிரி ராஜ்குமார், 3 வது எதிரி உக்கிரவேல், 4 வது அஜித்கண்ணன், மற்றும் 5 வது எதிரி ஜெயராஜ் ஒப்புதல்வாக்குமூலம் அளிப்பதாக ஒப்புக்கொண்டனார். அதன்படி என் முன்னிலையில் 5 நபர்களும் தனித்தனியாக ஒப்புதல்வாக்குமூலம் அளித்தனர். அதில் நானும் மணிகன்டனும் சாட்சி கையொப்பம் செய்தோம். **5 நபர்களுடைய ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள 2 வது உள்ள என்னுடைய சாட்சி கையொப்பங்கள் முறையே அதசாஆ 4 முதல் 8 ஆகும்.** மேற்படி ஒப்புதல்வாக்குமூலங்களில் மேற்சொன்ன எதிரிகள் தங்களை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதங்களை எதிரிகள் மறைத்து வைத்திருக்கும் இடத்தில் இருந்து எடுத்து கொடுப்பதாக சொன்னார்கள். 1 வது எதிரி

ராஜேந்திரன் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் “ நான் ........ செய்யப்பயன்படுத்திய வீச்சுஅருவாளை Neyveli B point ஏரிக்ரையில் உள்ள புதரில் மறைத்து வைத்தேன்" மற்றும் "என்னை அழைத்து சென்றால் ...... வீச்சுஅருவாளை எடுத்து ஆஜர் செய்வேன் என கூறியுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ 9 வரிசை ஆகும். அதேபோல் 2 வது எதிரி ராஜ்குமார் " நான் ...... வீச்சுஅருவாளை வடக்கு வெள்ளூர் காசி விலாசட்சி உடனுறை காசி விஸ்வநாதன் கோவில் வடக்கு பக்கம் உள்ள மதகு ஓரம் வளர்ந்து கொரைப்புல் மறைவில் மறைத்து வைத்து விட்டு நான் ........ மோட்டார் சைக்கிள்கள் மந்தராக்குப்பம் பெரியாகுறிச்சி பக்தா நகர் முதல் குறுக்கு தெருவில் 2 வது வீடான வெங்கட் என்பவர் வீட்டில் மறைத்து வைத்து" மற்றும் " நான் மறைத்து வைத்திருக்கும் வீச்சுஅருவாளையும், மோட்டார் சைக்கிளிளையும் அடையாளம் காட்டி எடுத்து கொடுப்பேன்" என கூறியுள்ள அனுமதிக்கப்பட்ட அதசாஆ 10 வரிசை ஆகும். 3 வது எதிரி உக்கிரவேல் வாக்குமூலத்தில் "என்னை அழைத்து சென்றால் .......... பயன்படுத்திய வீச்சுஅருவாளை என்வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் படுத்துவேன்" என கூறியுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ 11 ஆகும். 4 வது எதிரி அஜித்கண்ணன் " நான் ...... வீச்சுஅருவாளை வடக்கு வெள்ளுர் காசி விசாலட்சி உடனுறை காசி விஸ்வநாதன் கோவில் வடக்கு பக்கம் உள்ள மதகு ஓரம் வளர்ந்து கோரைப்புல் மறைவில் மறைத்து வைத்து விட்டு நான் ........ மோட்டார் சைக்கிள்கள் மந்தராக்குப்பம் பெரியாகுறிச்சி பக்தா நகர் முதல் குறுக்கு தெருவில் 2 வது வீடான வெங்கட் என்பவர் வீட்டில் மறைத்து வைத்து" மற்றும் " நான் மறைத்து வைத்திருக்கும் வீச்சுஅருவாளையும், மோட்டார் சைக்கிளிளையும் அடையாளம் காட்டி எடுத்து கொடுப்பேன்" என கூறியுள்ள ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள

அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ 12 ஆகும். மேலும் 5 வது எதிரி ஜெயராஜ்" நான் ...... கத்தியை நெய்வேலி சுரங்கம் 1 ஏ , வட்டம் 24 ல் உள்ள church 1 ஏ , 1 சுரங்கத்திற்கு செல்லும் இடது பக்கம் உள்ள ஒரு புதரில் மறைத்து வைத்தும் நான் ......... வண்டியை மந்தராக்குப்பம் பெரியாகுறிச்சி பக்தா நகர் முதல் குறுக்கு தெருவில் 2 வது வீடான வெங்கட் என்பவர் வீட்டில் மறைத்து வைத்து" மற்றும் " என்னை அழைத்து சென்றால் ....... கத்தியையும்..... புல்லட் மோட்டார் சைக்கிள் மறைத்து வைத்திருந்த இடத்தை காட்டி எடுத்துக்கொடுக்கிறேன்" என கூறியுள்ள ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 13 ஆகும். அவ்வாறே மேற்சொன்ன இடங்களுக்கு முதலில் நெய்வேலி வட்டம் 24 ல் உள்ள 1ஏ Mine செல்லும் கட்டு ரோடு அருகே உள்ள புதரில் ஜெயராஜ் மறைத்து வைத்திருந்த சான்று பொருள் 2 டிசைன் கத்தி ஒன்று பிறகு B point ஏரி அருகே உள்ள புதரில் இருந்து கட்டை ராஜேந்திரன் என்பவர் மறைத்து வைத்திருந்த சான்று பொருள் 3, வீச்சுஅருவாள் ஒன்று அவர் எடுத்துக்கொடுக்க அது கைப்பற்றப்பட்டது பிறகு வடக்குவெள்ளுர் காசி விசலாட்சி உடனுறை , காசி விஸ்வநாதன் கோவில் அருகில் உள்ள கோரைப்புல்லில் இருந்து சான்று பொருள் 4 வரிசை, கத்திகள் இரண்டு கைப்பற்றப்பட்டன. பிறகு கட்டை ராஜேந்திரன் வீடு அருகே உள்ள முன்னாள் கவுன்சிலர் ராமு என்பவரின் காலிமனையில் உள்ள புதரில் இருந்து உக்கிரவேல் என்பவர் மறைத்து வைத்திருந்த சான்று பொருள் 5, கத்தி ஒன்று கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு பெரியாகுறிச்சி பக்தா நகர், முதல் குறுக்கு தெரு, 2 வது வீட்டில் மூன்று இருசக்கர வாகனங்கள் சான்று பொருள் 6 வரிசை கைப்பற்றப்பட்டன. **மேற்படி 5 கைப்பற்றுதல் மகஜர்கள் முறையே அதசாஆ 14 முதல் 18 வரை ஆகும்.** இது

குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி ஒப்புதல்வாக்குமூலங்கள் அளித்த எதிரிகளில் ஒரு எதிரி மட்டும் தான் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். அவர் 4 வது எதிரி அஜித்கண்ணன் ஆகும்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

காவல் ஆய்வாளர் அன்று என்னை காவல்நிலையம் வர சொன்னார். நான் அப்போது பெரியாகுறிச்சி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். நெய்வேலி தெர்மல் காவல்நிலையம் வடக்குமேலூர் கிராம நிர்வாக அலுவலரின் எல்லைக்குள் வருகிறது. அன்றையதினம் வடக்குமேலூர் கிராம எல்லைக்கு நான் பொறுப்பு எதுவும் இல்லை. 20.04.2017 அன்று நான் காவல்நிலையம் வந்து விட்ட பிறகு எனது பெரியாகுறிச்சி கிராமத்திற்கு வேறு யாரும் பொறுப்பு அதிகாரி கிடையாது. நான் மாற்று அலுவலாக வெளியே சென்று விட்டால் பொறுப்பு அதிகாரி நியமிப்பார்கள் என்றால் சரிதான். காலை 7.00 மணிக்கு மாலை 5.00 மணிக்கு தான் நான் திரும்ப வந்தேன். இந்த இடைப்பட்ட காலத்தில் கிராம உதவியாளர் நிர்வாக பணியை பார்த்துக்கொண்டார். மறுநாள் அந்த பணியை நான் பார்த்துக்கொண்டேன். இந்த விவரத்தை எனது நாட்குறிப்பில் நான் எழுதிக்கொண்டேனா என்றால் நாட்குறிப்பு எதுவும் எங்கள் அலுவலகத்தில் பயன்படுத்துவது கிடையாது. நான் வெளிப்பணிக்கு செல்லுவதற்கு தகவல் பலகையில் மட்டும் எழுதி வைப்போம். பதிவேடு எதுவும் பராமரிக்கவில்லை. எனக்கும் அலுவல் ரீதியாக கையேடு எதுவும் கிடையாது. நான் அலுவல் ரீதியாக கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் கையொப்பம் போட்டு முத்திரையிட வேண்டும் என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்ட இந்த வழக்கு

ஆவணங்களில் முத்திரை எதுவும் செய்தேனா என்றால் செய்யவில்லை . முத்திரை கையில் எடுத்து செல்லவில்லை. போலிசார் தகவல் கொடுத்து நான் என்ன பணிக்கு நிலையம் செல்ல போகிறேன் என்ற விவரம் எனக்கு தெரியும். வீட்டில் இருந்து நான் காவல்நிலையம் சென்றேன். அன்று காலை நான் அலுவலகத்திற்கு நான் செல்லவில்லை. மாலையில் தான் அலுவலகம் சென்றேன். நான் என்ன பணிக்காக எங்கே சென்றேன் என்ற விவரத்தை கிராம உதவியாளர் அலுவலக பலகையில் எழுதினார். காலை அவசரமாக சென்றதால் நான் முத்திரையை எடுத்து செல்லவில்லை. எனது அலுவலகம் வழியாகத் தான் தெர்மல் காவல்நிலையம் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் காவல்நிலையம் சென்ற போது கிராம நிர்வாக அலுவலர் மணிகண்டன் அங்கே இருந்தார். எண்.31, 3 வது குறுக்கு சந்து, பக்தா நகர் எனது வீட்டு விலாசம் ஆகும். ஒப்புதல்வாக்குமூலத்தில் நானும் கிராம நிர்வாக அலுவலர் மணிகண்டனும் கையொப்பம் செய்தோம். வேறு யாரும் கையொப்பம் செய்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகஜரில் நானும் கிராம நிர்வாக அலுவலர் மணிகண்டன் கையொப்பம் செய்தோம். வேறு யாரும் கையொப்பம் போட்டார்களா என்று எனக்கு தெரியாது. 5 எதிரிகளின் ஒப்புதல்வாக்குமூலங்களை காவல்நிலையத்திலும், கைப்பற்றுதல் மகஜர்களை அந்த அந்த இடத்திலும் கையொப்பம் செய்தோம். முதலில் கைப்பற்றியது 11.30 மணிக்கு. அதன்பிறகு அடுத்த கைப்பற்றுதல் 12.30 மணிக்கு செய்யப்பட்டது. 11.30 மணிக்கு கைப்பற்றுதல் செய்தபோது அனைத்து எதிரிகளும் இருந்தார்கள். எதிரிகள் ஒரு ஜுப்பிலும், நாங்கள் ஒரு ஜீப்பிலும் சென்றோம். எதிரிகள் 1 முதல் 5 ஆகியோரின் தகப்பனார் பெயர்கள் எனக்கு தெரியாது. 5 வது எதிரி ஜெயராஜ் வடக்குமேலூர்

சேர்ந்தவர். 3 வது எதிரி உக்கிரவேல் தாண்டவன்குப்பத்தை சேர்ந்தவர். 4 வது எதிரி அஜித்கண்ணன் எந்த ஊரை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. 2 வது எதிரி ராஜ்குமார் எந்த ஊரை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. 1 வது எதிரி ராஜேந்திரன் தாண்டவன்குப்பத்தை சேர்ந்தவர். கைப்பற்றப்பட்ட இடங்களில் உள்ள ஏரிகளில் தண்ணீர் இருந்தது. ஏரி கரை ஓரத்தில் தான் பொருட்கள் மறைந்து இருந்தது. கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இரத்தக்கறையுடன் ஈரமாக இருந்தது. கைப்பற்றப்பட்ட இடத்திலேயே பொருட்களை pack செய்தார்கள் என்றால் சரிதான். முத்திரை எதுவும் வைக்க வில்லை. சான்று பொருள் 2 டிசைன் கத்தியை தவிர மற்ற ஆயுதங்கள் குறிப்பிட்டு எங்கு இருந்து கைப்பற்றப்பட்டன என்று என்னால் செல்ல முடியாது. வாகனங்கள் கைப்பற்றப்பட்டது எனது கிராம எல்லைக்குள் என்பதால் ஆய்வாளர் என்னை அழைத்தார். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன இடத்தில், சொன்ன பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் பின்னிட்டு நான் கையொப்பம் செய்து விட்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*